RECEIVED 1978-2-10 PERIODICALS DIVISION UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS LIBRARY

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு
THE EELANAADU

மலர் 19 தை 28 ரபி அவ்1 1 இதழ் 362
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 10-2-78




## கனகர் உடல்நிலை

[கொழும்பு]

நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாக சத்திரசிகிச்சைக்குள்ளான பொத்துவில் 2-வது எம். பி. திரு. கனகரத்தினத்தின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்படுவதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது. (ம)

ஹாக்கி டெஸ்ட்:

## இந்தியா தோல்வி

பம்பாய், பெ. 9

இன்று இங்கு ஆரம்பமான இந்திய-பாகிஸ்தான் முதல் ஹாக்கி டெஸ்டில் பாகிஸ்தான் (2-1) வெற்றி பெற்றது.

"தமிழ்பகுதிகளில் பொலிஸாரும் கொழும்பில் குண்டர்களும் தாக்கினர்

# பொலிஸாரின் தாக்குதலின் பின்னணியில் திட்டமிருந்தது!

## சன்சோனிகமிஷன்: 'அமிர்' 3மணிநேர சாட்சியம்

"கொழும்பில் தமிழர்களை பொலிசார் தாக்கவில்லை. குண்டர்கள் அங்கு தமிழர்களைத் தாக்கினார்கள்; கொள்ளையடித்தனர்! பொலிஸார் இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தனர். யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா போன்ற தமிழ்ப்பகுதிகளில் பொலிஸார் தாக்குதல்கள் நடத்தினர். அனுராதபுரத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டபோதும், கொள்ளைகள் நடந்தபோதும் பொலிசார் பார்த்துக்கொண்டிருந்தனர். இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் ஏதோ ஒரு மறைமுகமானதிட்டம் இருந்திருக்கிறது"

யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும் சன்சோனி விசாரணைக் கமிஷன் முன் நேற்று சாட்சியமளித்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

### மூன்று ஆண்டுகள்...

யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸார், ஆக்கிரமிப்புக் கொண்ட இராணுவத்தினரைப்போல நடந்துவந்திருக்கிறார்கள். இவர்களின் இந்தப் போக்கினால் 3 வருடகாலமாக பல அசம்பாவிதங்கள் நிகழ்ந்துள்ளன. இவைகளில் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாளில் 9 பேர் கொல்லப்பட்டதும், செம்மணியில் ஆலயத்திற்கு சென்று திரும்பிய அப்பாவி இளைஞர் பொலிஸாரின் சூட்டுக்குப் பலியானதும் குறிப்பிடத்தக்கதாகும்" என்றும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்;

### மூன்று மணிநேரம் சாட்சியம்

தேசியஉடையில் வந்திருந்த திரு. அமிர்தலிங்கம் காலை 10-20 மணிக்கு சாட்சியமளிக்க ஆரம்பித்தார். சுமார் 3 மணி நேரம் சாட்சியமளித்த அவர், பிற்பகல் 1-20 மணிக்கு சாட்சியத்தை முடித்துக்கொண்டார்.

திரு. அமிர்தலிங்கம் சாட்சியமளிக்கவந்ததும் கமிஷனர் திரு. எம். சி. சன்சோனி, அவரைக் கதிரையில் அமர்ந்து சாட்சியமளிக்குமாறு கூறியபோது, இல்லை நின்றுகொண்டே சாட்சியமளிக்கின்றேன் என்று திரு அமிர்தலிங்கம் கூறி சத்தியப்பிரமாணம் செய்தபின் சாட்சியத்தை ஆரம்பித்தார்.

திரு. அமிர்தலிங்கம் சாட்சியமளிக்குமுன், சட்டத்தரணி சாம் ஜே. கதிர்காமர் கியூ சி, சட்டத்தரணி ஜெய் பெரிசுந்தரம் ஆகியோர் சுமார் 45 நிமிடம் சம்பவங்கள் தொடர்பாக உரைநிகழ்த்தினார்கள்.

### 'யோகேஸ்' இன்று சாட்சியம்

நேற்று நல்லூர் எம். பி திரு. எம். சிவசிதம்பரம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், கோப்பாய் எம் பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை மானிப்பாய் எம். பி. திரு வி. தர்மலிங்கம் ஆகியோர் வந்திருந்தனர். யாழ்ப்பாணம் எம் பி திரு. யோகேஸ்வரன் வந்திருந்தபோதிலும் நேற்று சாட்சியமளிக்கவில்லை. திரு. யோகேஸ்வரன் இன்று சாட்சியமளிப்பார்.

### தமிழாராய்ச்சி மாநாட்டுச் சம்பவம்

திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது: "யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழாய்ச்சி மாநாட்டின் இறுதிநாளன்று; 74 ம் ஆண்டு ஜனவரி 10-ம் திகதி உலகநாடுகள் எங்குமிருந்து தமிழ் அறிஞர்கள் வந்திருந்தனர். உலக அறிஞர்களுக்கு பிரியாவிடை அளிப்பதற்காக சுமார் 50 ஆயிரம் பேர் திரண்டிருந்தனர். பொலிஸார் திடீரெனத் தோன்றி குண்டாந்தடிப்பிரயோகம் செய்தார்கள்; கண்ணீர்ப்புகையடித்தார்கள். மக்கள் நாலாபக்கமும் ஓடினார்கள். 9 பேர்கள் உயிரிழந்தனர். இச்சம்பவம்பற்றி விசாரணைக்கமிஷன் ஒன்று நியமிக்குமாறு அரசாங்கத்திடம் கோரினோம். அரசு கமிஷன் நியமிக்க மறுத்துவிட்டது. இதன்பின் யாழ் பிரஜைகள் கமிட்டி ஒரு விசாரணைக்கமிஷனை நியமித்தது பொலிஸார் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்களென்றால், இச் சம்பவத்திற்கு பொறுப்பாக இருந்த உதவிபொலிஸ் அதிபர் பொலிஸ் அதிபராக பதவிஉயர்வுபெற்றார்.

### செம்மணிச் சம்பவம்

"மற்றொருசம்பவம் செம்மணியில் நடந்தது. நல்லூர்கந்தசுவாமிகோவிலுக்கு சென்றுதிரும்பிய இளைஞர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானார். இதுபற்றிய வழக்கொன்று நடக்கவிருப்பதால் அதுபற்றி விபரித்துக்கூறவில்லை. இதுபோன்று பல சம்பவங்கள் நடைபெற்றன. யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்கள் சட்ட ஒழுங்கின்மையை காட்டுகிறது. பொலிஸார் சட்ட ஒழுங்கின்மையாக நடந்தனர் உயர் அதிகாரிகள் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையிலும், தடுக்க முடியாத நிலையிலும் இருந்தனர்

### தமிழர்களை ஆட்சிசெய்ய விரும்புகிறார்கள்

"பொலிஸார் இப்படி ஏன் நடந்து கொண்டார்கள்? இன உணர்வால், அவர்கள் தமிழர்களை ஆள்வதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். 1948-ம் ஆண்டுக்குப்பின் இந்நிலை ஆரம்பித்து, 1956-ம் ஆண்டுக்குப்பின் வளர்ந்துள்ளது. புதிதாக பொலிஸ் பகுதிக்கு திரட்டப்பட்டவர்கள். தாங்கள் பொலிஸ் கடமைக்கு நியமிக்கப்பட

(6-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையில் உடனடி மாற்றம் இல்லை

[கொழும்பு]

அமைச்சரவையில் உடனடியாக எந்தவித மாற்றமும் ஏற்படமாட்டாது என்று தெரியவருகிறது.

மார்ச் மாதத்தில் அல்லது அதற்குப் பின்னர்தான் அமைச்சரவையில் மாற்றங்கள்-மாவட்ட அமைச்சர்கள் நியமனம் இடம்பெறும் என்று அறியப்படுகிறது. (ம)

அமரர் ஜீ. ஜி. நினைவு அஞ்சலி

## "அரசியல் குரோதங்களுக்கு அப்பாற்பட்ட தேசியசின்னம்'

— வி. பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

"அமரர் ஜி. ஜி பொன்னம்பலம் அரசியல் குரோதங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தேசிய சின்னம். அவர் வரலாற்று மகாபுருஷர். இந்த நிலையில் அரசியல் கருத்தில் மாறுபட்டவர்களும் அவரை நினைவுகூறும் விதத்தில் இவ்வைபவம் அமைந்துள்ளது."

யாழ். பொதுநூலக வளவில் நடந்த அமரர் ஜி.ஜி. அஞ்சலி வைபவத்தில் செந்தமிழர் இயக்க செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அமரர் ஜி. ஜி யின் வெண்கலச் சிலை நிறுவும் இடத்திற்கான பத்திரத்தை யாழ். மாநகர ஆணையாளர் திரு. கே. இவஞானம், ஜி. ஜி. ஞாபகார்த்தக் குழுத் தலைவர் திரு. ஆர். என். சிவப்பிரகாசத்திடம் கையளித்தார்.

யாழ். மாவட்டத்தில்

## ஆரம்ப பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறை!

### முதலாம்தரக் குழந்தைகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல ஆரம்பப் பாடசாலைகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லாததினால் பிள்ளைகளின் கல்வி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாண நகர எல்லைக்குள்ளிருக்கும் ஆரம்பப பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறை கடுமையாக நிலவுகிறது!

பல ஆரம்பப் பாடசாலைகளில் உள்ள முதலாம்தர வகுப்புகளில் ஆசிரியர்கள் இல்லை, இதனால் அரசாங்கத்தின் புதிய திட்டத்திற்கமைய ஐந்துவயது நிரம்பிய குழந்தைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதுடன், இந்த ஆரம்பப் பாடசாலைகளின் அதிபர்களும் முதலாம்தர குழந்தைகளின் கல்வி விஷயத்தில் செய்வதறியாது திண்டாடுகின்றனர்!

## வரி விளம்பரம்

### தேவை

அவுட்டோர் படப்பிடிப்பு டாக்ரூம் வேலையில் அனுபவமுள்ளவர் சேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் பேபிபோட்டோ சர்வகலாசாலைவியூ, திருநெல்வேலி யாழ்ப்பாணம். 8461

கண்ணுடித் தொழிற்சாலைக்கு 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் வேலை பழகுவதற்கு உடனடியாகத் தேவை. வேலை பழகும்போது சம்பளம் ரூபா 3/75. நேரில் வரவும். விபரங்களுக்கு: பெனின்சுலா கண்ணுடித் தொழிற்சாலை, 25, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 8439

பத்து வருடங்களுக்கு மேலான அனுபவமும் நற்பழக்கமும் நம்பிக்கையும் வாய்ந்த லொறி லைசென்ஸ் உள்ள வான் டிறைவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8411, C/o ஈழநாடு, லிமிட்டெட்., யாழ்ப்பாணம். 8411

இரும்பு வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆள் தேவை. ரைப்பிங், கணக்குபதிதல் தெரிந்தவராயிருத்தல் அவசியம். விபரங்களுக்கு கடிதமூலம் தொடர்பு கொள்க. விளம்பர இல: 8448, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 8448

### விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் மாத்தனைக் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் வீடுகட்டுதற்குகந்த 4½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. சிவசுப்பிரமணியம், தாவடி உப தபாற்கந்தோருக்கு அருகில், கொக்குவில். 8453

### கல்வி

G. C. E. O/L A. L. கலை வர்த்தகம், விஞ்ஞானவகுப்புக்களும் தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்புக்களும் கிழமை நாட்களிலும், சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெறுகின்றன. 1979 ஆம் ஆண்டுக்குரிய A.L கலை, வர்த்தக விஞ்ஞான வகுப்புக்கள் 11-2-78இல் ஆரம்பமாகும்; 1978ஆம் 79ஆம் ஆண்டுகளுக்குரிய London A.L. வகுப்புக்களும் 11-2-78 காலை 9 மணியளவில் ஆரம்பமாகும். யாழ்ப்பாணக்கல்வி நிலையம், 22 இராமையா செட்டியார் லேன், ஆசுப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சாந்தி படமாளிகைக்குமுன்னுல்] பஸ் நிலையத்திலிருந்து 100 யார் தூரத்தில் உள்ளது. 8465

### கிளிநொச்சிப் பட்டணம்

### பாவிக்கப்பட்ட ஒடுகள் விற்பனை

15-2-78 வரை இக்கந்தோரில் பிணைப்பணம் ரூபா 50/-ம், பத்திரப்பணம் ரூபா 5/-ம் செலுத்தப்பட்டு பெற்றுக்கொண்ட பத்திரங்களில் மேற்படி ஓடுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விசேட ஆணையாளர்

கிளிநொச்சிப் பட்டணம். 8463

## சங்குப்பிட்டி வள்ளச்சேவை சீர்கேடு

[பூநகரி]

சங்குப்பிட்டி வள்ளச் சேவை சீர்கேடடைந்தநிலையில் இருப்பதாக அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 6ம் திகதி பிற்பகல் யாழ்ப்பாணத்தில் இருந்துவந்த பிரயாணிகள் பூநகரி, மன்னுர் மற்றும் பகுதிகளுக்குச் செல்வதற்கு வள்ளச் சீர்கேட்டால் பெரிதும் சிரமமுற்றனர்.

வள்ளக்காரருக்கு நலா ஒரு ரூபா கொடுத்தே வள்ளத்தில் செல்லவேண்டியநிலை ஏற்பட்டதாம். (உ)

## பிறந்ததின வாழ்த்து



புங்குடுதீவு மூன்ரும் வட்டாரத்தைச் சேர்ந்த முத்துக்குமாரு ஜெயராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ராஜேஸ்கண்ணன் தனது முதலாவது பிறந்ததினத்தை அவரது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிருர்.

அவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பாச்சி, அம்மாப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், ஆகியோர் பல்லாண்டு வாழவாழ்த்துகின்றுர்கள். 8456

## இன்று

(யாழ்ப்பாணம்)

பாடசாலையைவிட்டு வெளியேறிய மாணவர்களுக்கான பகுதி நேர தொழில் நுட்ப பயிற்சி நெறியில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இடைக்காடு மகாவித்தியாலய மண்டபத்தில் இன்று பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

திருவாளர்கள் இ. வி. இராமநாதன், ஏ. எஸ். நல்லையா, ஏ. வி. தங்கராஜா முதலானேர் பேசுவர்.

திரு சி. சந்திரசேகரம் நன்றியுரைநிகழ்த்துவார்.

கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## யாழ். விவசாயிகள்—

(3ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ்ப்பாணத்தில் இலங்கையின் மற்றைய பாகங்களைப் போல் தனிப்பட்ட நபர்களால் புகையிலை நடப்படுவதில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே நடுகின்றனர். யாழ்ப்பாணம் முழுவதும் 9 சங்கங்கள் மட்டுமே செயல்பட்டுவந்தன. ஆனல் தற்பொழுது 11 சங்கங்கள் செயல்பட ஆரம்பித்துள்ளன. இன்று இலங்கையில் சிகரட் புகையிலை உற்பத்தியின் மூலமாக சுமார் 150,000 மக்கள் நிரந்தர வேலைவாய்ப்பையும், வருமானத்தையும் பெறுகின்றனர். புகையிலைக் கம்பனியே அரசாங்கத்திற்கு மிகக் கூடிய வருமான வரியையும் கொடுத்துவருகிறது. கடந்த 76—78ம் ஆண்டில் மட்டும் 730 கோடி ரூபாய்களை வருமான வரியாகச் செலுத்தியுள்ளது.

1927ம் ஆண்டு பிரித்தானிய அமெரிக்கன் புகையிலைக் கம்பனி இலங்கையில் சிகரட்டுகளையும், புகையிலைகளையும் உற்பத்திசெய்தது. 1932ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலங்கைப் புகையிலைக் கம்பனி இக்கம்பனியின் வியாபாரங்களைப் பொறுப்பேற்றது. 1955ம் ஆண்டு இக்கம்பனி மாலைதீவிலும், இலங்கையிலும் உள்ள கொட் பிறிபிலிப்ஸ் என்னும் சிகரட் கம்பனியின் சொத்துக்களையும் வியாபாரங்களையும் வாங்கிக்கொண்டது.

இலங்கையில் சிகரட் செய்வதற்குவேண்டிய புகையிலை பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. 1939ம் ஆண்டு புகையிலை நடுகை பற்றிய பரிசோதனைகளை அரசாங்கம் நடாத்தத் தொடங்கியது. 1940ம் ஆண்டு இலங்கைப் புகையிலைக் கம்பனி அரசாங்கத்துடன் ஒத்துழைத்து பரிசோதனைகளை நடாத்தத் தொடங்கியது. இதன் பேருக இலங்கையில் புகையிலை நடுகை பெருமளவு அதிகரித்தது. இன்று புகையிலை இறக்குமதி நிறுத்தப்பட்டதோடு பெருமளவு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. பெருமளவு வெளிநாட்டு பணம் எமது நாட்டுக்கு கிடைக்கிறது. அத்துடன் சிறந்த சிகரட்டுகளையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. தற்பொழுது நில்தண்டகிள்ள, வலப்பனை, கங்குருவத்த, குடாவேவ, காலிஎல ஆகிய பகுதிகளில் புகையிலை பெருமளவில் பயிரிடப்படுகிறது.

புகையிலை மகா அல்லது யால காலங்களில் பயிரிடப்பட்டு வருகிறது. உரிமையாளர்களையும், சிகரட் புகையிலைச் சங்கங்களையும் புகையிலை உற்பத்தி செய்வதில் கம்பனி தூண்டிவருகிறது. உற்பத்தியாளர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை அவ்வப்பகுதியில் பணிபுரியும் கம்பனி உத்தியோகத்தர்கள் இலவசமாக வழங்கிவருகிருர்கள். அத்துடன் தெரிவுசெய்யப்பட்ட உயர்ந்த விதைகள், கடன் அடிப்படையில் இறக்குமதிசெய்யப்பட்ட சிறந்தஉரங்கள், கிருமிநாசினிகள், வேண்டிய உபகரணங்கள் ஆகியவற்றை கொடுத்துவருகிறது. கொடுக்கப்பட்ட கடன்களைக் கம்பனி படிப்படியாகக்கழித்து வருகிறது. புகையிலை உற்பத்தியாளர்களுக்கு மக்கள் வங்கி ஊடாக கடன் உதவிகளையும் பெற்றுக்கொடுக்கிறது. புகையிலையை நடும்போது அதிக மழை, அல்லது அதிக வரட்சி என்பவற்ருல் நட்டம்ஏற்படின் அவற்றை நிவிர்த்திக்க கம்பனி நட்டஈட்டு முறைகளை கைக்கொண்டுவருகிறது.

காய்ச்சப்பட்ட புகையிலை 8தரங்களாகப் பிரிக்கப்படுகிறது. அவற்றுள் முதலாவது தரப்புகையிலையின் உத்தரவாதவிலை ரூபா 6·75 சதமும், கடைசி எட்டாவது தரப் புகையிலையின் உத்தரவாதவிலை ருத்தலொன்று ரூபா 3 60 சதமாக இருந்தபொழுதிலும், புகையிலை பயிரிடுவோரை ஊக்குவிப்பதற்காக கடந்த வருடம் கடைசி மூன்று தரங்களுக்கும் கம்பனி உத்தரவாத விலையிலும் பார்க்க ருத்தல் ஒன்றுக்கு 60 சதம் கூட்டிக் கொடுத்தது. இதனல் பயிரிடுவோர் அதிக நன்மையடைந்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் கமக்காரர்கள் வர்த்தகப் பயிர்களிலும் பார்க்கஅதிக லாபத்தை நிரந்தரமாகப் பெறக்கூடிய சிகரட்புகையிலை உற்பத்தியில் பெருமளவில் ஈடுபட மேலும் முன்வரவேண்டும் இவர்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும்செய்ய இலங்கைப் புகையிலைக் கம்பனி ஆயத்தமாக இருக்கிறது

[அரியாலை நிரு]

சுருட்டுத் தொழிலாளர்

## கோரிக்கை நிறைவேறும் சாத்தியம் உண்டாம்

### சங்கத்தலைவர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளரின் கூலி உயர்வுக் கோரிக்கையை நிறைவேற்ற 150 சுருட்டு முதலாளிகள்வரை சம்மதித்துள்ளனர் என்று அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம்தெரிவித்தார் மேலும் சுமார் நூறு முதலாளிமார் இதற்குச் சம்மதம் தெரிவிக்கும் நிலை உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது சுருட்டுத் தொழிலாளருக்கு வழங்கப்படும் வேதனமான 1000 க்கு ரூ 27-50 சதத்தை ரூ 32-50 சதமாக உயர்த்தும்படி முதலாளிமாரைக் கோரி இவ்வேலைநிறுத்தம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. [உ]

### கோட்டு விற்பனவு விளம்பரம்

உடுவில், 1. மயில்வாகனம் சந்திரசேகரமும்
2. பெண் தங்கரத்தினமும்

வழக்காளிகள்

எதிராக

இல. ஈடு /941

உடுவில்-புதுக்குடியிருப்பு, முதலி கந்தையா கைம்பெண் பூலோகவதி இவர்தானுகவும் காலஞ்சென்ற முதலி கந்தையாவின் சொத்துக்களின் சட்டப் பிரதிநிதியாகவும்.

எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக்கோட்டில் ஈடு/941ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1978ஆம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மாதம் 15ஆம் திகதி (15-2-78) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 9265/-ம் இதில் ரூபாய் 5450/-க்கு 21-10-75 திகதி தொடக்கம் 20-5-76 திகதி வரைக்கும் 100க்கு 10 வீத வட்டியும் பின்திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 765-55 சதமும், இதில் தீர்வையில் ரூபாய் 5000/ம், செலவில் ரூபா 500/ம் 1-4-77இல் கொடுபட்டது.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவிற் கோவிற்பற்று உடுவிலிறை 'குரும்பந்தனை' நிலப்பரப்பு (6) ஆறும், வீடும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும்; இதற்கு எல்லை: கிழக்கு குறித்த முதலி கந்தையாவுக்கும் பெண் பூலோகவதிக்கும் உரிய ஆதனம், வடக்கு கார்த்திகேசு பெண் அகிலேஸ்வரியின் ஆதனம், மேற்கு நாகர் கந்தசாமிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு வேலன் சின்னத்துரையின் ஆதனம், இவ்வெல்லைப்படி இதடங்கலும், இன்னும் தெற்கெல்லைக் காணியின் மேற்கெல்லையருகால் இக் காணிக்கு வரும் பேரொழுங்கைப் பாவிப்புரித்தும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
ஏலவிற்பனையாளரும்

தெல்லிப்பழை;
16-12-1977

8459


## பத்ம ஜீ. ஜீ. க்கு அஞ்சலி

தியாகவேந்தன் பொன்னம்பலம்
குணவேந்தன் பொன்னம்பலம்
ஞானவேந்தன் பொன்னம்பலம்
கீர்த்திவேந்தன் பொன்னம்பலம்
சட்டவேந்தன் பொன்னம்பலம்

ஜே. ரி. J. T. ஜே ரி.

### கேசரி - மித்திரன் புத்தகக் களஞ்சியம்

236, ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம்

8460



காரைநகர்

## பாலா அச்சகத் திறப்புவிழா

காலம்: பிங்கள ஆண்டு தைத்திங்கள் 28ம் நாள் (10—2—78 வெள்ளி மாலை 4·00 மணி.

திறக்குநர்: நாவலப்பிட்டி ஆத்மஜோதிஅச்சகஉரிமையாளர்

திரு. நா அருமைநாயகம் அவர்கள்

தொடக்குநர்: தொழிலதிபர் தேசியப்பேரவைஉறுப்பினர் வட்டுக்கோட்டை.

திரு. தா. திருநாவுக்கரசு அவர்கள்

ஆசியுரைகள்:-

1. எதிர்க்கட்சித்தலைவரும் தேசியப்பேரவை உறுப்பினருமாகிய திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள்
2. சாவகச்சேரித் தேசியப்பேரவை உறுப்பினர் திரு. வ. நவரத்தினம் அவர்கள்
3. சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

நன்றியுரை: சைவமணி வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள்

8462

ஈழநாடு
The Eelanaadu

## பாவனைப் பொருள் விநியோகம்

"பாவனையாளர்களுக்கு இருவாரகாலம் விநியோகம் செய்வதற்குரிய அரிசி, சீனி, மா ஆகிய உணவுப் பொருட்களைக் கையிருப்பில் வைத்திருக்காத கூட்டுறவுச்சங்க முகாமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பான விசேட உத்தரவொன்றை உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு எஸ் பி ஹேரத் சகல மாவட்ட உதவி உணவு ஆணையாளர்களுக்கும் திடீர் பரிசோதனைக் குழுக்களுக்கும் பிறப்பித்துள்ளார்."

சில தினங்களுக்கு முன் பத்திரிகைகளில் வெளியான ஒரு செய்தி இது.

"அரிசி, மா, சீனி முதலிய உணவுப் பொருட்களை கொழும்பிலிருந்து பெற வேண்டிய நிலை நீடித்து வருவதையிட்டு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் புகார் தெரிவிக்கின்றன.

இது இன்னொரு செய்தி. நேற்று 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியான மற்றொரு செய்தி வருமாறு:

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் பாவனைப் பொருட்களை கிளைகளுக்கு விநியோகம் செய்யவும் கொழும்பிலிருந்து அவற்றைக் கொண்டுவரவும் லொறிகள் பற்றாக்குறையாகவுள்ளதாம். இதனால் தனியார் லொறிகளை அமர்த்தி அவற்றின் கூலியாக மாதாந்தம் சுமார் 20,000க்கும் கூடுதலான பணத்தைக் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாவனைப் பொருட்களை மக்களுக்குத் தட்டுப்பாடு இன்றி வழங்குவதில் அமைச்சர் கொண்டிருக்கும் ஆர்வத்தையும் அக்கறையையும் முதல் செய்தி எடுத்துக் காட்டுகின்றது. அதேசமயம் அமைச்சரின் ஆர்வத்தை செயல்படுத்துவதில் கூட்டுறவுச்சங்கங்களுக்கு உள்ள நடைமுறைக் கஷ்டங்களைப் படம்பிடித்துக் காட்டுகின்றன மற்ற செய்திகள். இந்த முரண்பாடான சூழ்நிலையில் பாதிப்புக்குள்ளாகிறவர்கள் பாவனையாளர்களான பொதுமக்களே.

பக்கத்திலுள்ள கிளைச்சங்கங்களுக்கே பொருட்களை உரியகாலத்தில் கிடைக்கச் செய்வதற்கு ப. நோ. கூ. சங்கங்களுக்குக் கஷ்டமிருக்குமானால் கொழும்பிலிருந்து பொருட்களைத் தருவிப்பதில் எவ்வளவு சங்கடமிருக்கும் என்று விமர்சிக்கத் தேவையில்லை.

நாடு முழுவதும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை விரைவாக விநியோகம் செய்வதற்கென ஏராளமான லொறிகளை அரசு இறக்குமதி செய்யவிருப்பதாக முன்பு ஒரு செய்தி வெளியாகி இருப்பதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

இந்த நிலைமையில் இருவாரங்களுக்கான பாவனைப் பொருட்களை எல்லாச்சங்கங்களும் கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் என்பது எங்ஙனம் சாத்தியமாக முடியும்?

தலைநகரிலிருந்து வெளி ஊர்களுக்கு உரியகாலத்தில் பாவனைப் பொருட்கள் போய்ச் சேருகின்றனவா என்பதை முதலில் உறுதிப்படுத்திக் கொள்வது அவசியம். இதிலுள்ள வசதியீனங்களை ஆராய்ந்து அவசியமான நடவடிக்கைகளை எடுப்பது அமைச்சின் கடமை.

இந்த முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு விடுமானால் நாடு முழுவதும் அத்தியாவசியப் பொருட்கள் தாராளமாகக் கிடைக்கும். தட்டுப்பாடும் பதுக்கலும் ஒழிவதுடன் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியும்.

# "நாவலர் பெருமான் பெரும் தீர்க்கதரிசி"

## நூல்வெளியீட்டுவிழாவில் வடமாநிலக் கல்வியதிபதி

[யாழ்ப்பாணம்]

"நம் நாட்டிலே தோன்றிய பெரியார்களுள் நாவலர் பெருமான் மிகமிகப் பெரியவர். தமிழர் என்றும், சைவர் என்றும் இன்று நம்மைச் சொல்லவைத்தவர் நாவலர் பெருமான். 'நல்லைநகர் நாவலர் பிறந்திலரேல் 'சொல்லு தமிழ்எங்கே', 'சுருதி எங்கே', எல்லவரும் ஏத்து புராணுகமங்களெங்கே பிரசங்கமெங்கே', என்று உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் பாடினர். நாவலர்பெருமான் தோன்றியிராது விட்டால் சைவம்-தமிழ் அழிந்திருக்கும். அவர் பெரிய தீர்க்கதரிசி. தீர்க்கதரிசியான நாவலர் பெருமானின் சரித்திரத்தை நாடகமாக்கித்தந்த பெருமை நூலாசிரியர் திரு. கு. சோமசுந்தரனுக்கே உரியது. திரு சோமசுந்தரன் பாராட்டுக்குரியவர்"

'நல்லைநகர்நாவலன்' நாடக நூல் வெளியீட்டுவிழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசிய வடமாநிலக் கல்வியதிபதி திரு. தில்லைநாதன் மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். இந்துக்கல்லூரிகுமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தமது ஆசிச்செய்தியில் "கற்றுணர் புலவர் உட்களிக்குப் முற்றுணர்ஆறுமுகநாவலனே' என்றும்காவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களினால் பாராட்டப்பட்ட நாவலர் பெருமானின் உண்மைச்சரித்திரம் இதுவரை வெளியாகவில்லை. உண்மைச்சரித்திரத்தை வருங்கால இளம் இதயங்களில் ஊற்றெடுக்கவைப்பதே இந்நாடக நூலாசிரியரான திரு. கு. சோமசுந்தரத்தின் பரிசுத்த உள்ளம்' என்று தெரிவித்திருந்தார்.

டாக்டர் க. கிருஷ்ணனந்தசிவத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இவ்விழாவில் நீதிபதி திரு. கே. வி. நவரத்தினம் பேசுகையில், "நாவலர் நமது 'நாட்டுக்கன்றித் தமிழ் பேசும் நல்லுலகுக்கே உரியவர். அவரது சரித்திரத்தை இயன்ற அளவுக்கு ஆராய்ந்து நாடகமாக்கிய பெரும் சுமையை ஆசிரியர் திரு. சோமசுந்தரன் ஏற்றுள்ளார். இந்நாடகநூல் படிக்கவும்ஏற்றது. நடிக்கவும் ஏற்றதென்று அறிஞர்கள் பாராட்டியிருப்பது தக்கசான்றாகும்" என்றார்.

யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. பொ. ச. குமாரசாமி பேசுகையில், "வடமாநிலத்தில் சிறந்த வட்டாரக் கல்வி அதிகாரியாகப் பெரும்பணி புரியும் திரு. கு. சோமசுந்தரம் எழுத்துத் துறையிலும் நல்லைநகர் நாவலன் நாடக நூல் மூலம் அழியாத பணியைச் செய்திருக்கின்றார். இது போன்ற எழுத்துப் பணியில் தொடர்ந்தும் ஈடுபட்டு நல்ல படைப்புக்களை ஆக்கவேண்டுமென்று பெரிதும் வேண்டுகோள் விடுக்கின்றேன்" என்றார்.

'தேவன்'வெளியீட்டுரையை நிகழ்த்த சிவநெறிப் புரவலர் திரு. க. கனகராசா முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார். சைவப்புலவர் திரு. க. சி. குலரத்தினம், கவிஞர் திரு. கந்தவனம் உட்படப் பலர் பாராட்டுரை வழங்கியதையடுத்து நூலாசிரியர் திரு. கு. சோமசுந்தரனின் பதிலுரையும் ஆசிரியர் திரு. ச. சதாசிவத்தின் நன்றியுரையும் இடம் பெற்றன.

'நல்லைநகர் நாவலன்' நாடகத்திற் சில காட்சிகள் இறுதியில் நடித்துக்காட்டப்பட்டது.

[அ]

# யாழ். விவசாயிகள் சிகரெட் புகையிலைநடுகையில்நாட்டம்

## காரணம் பற்றி போதனாசிரியர் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

"தற்பொழுது மற்றப் பயிர்களின் மூலம் கிடைக்கக்கூடிய வருவாய் நிச்சயமற்றதாக இருப்பதால் உத்தரவாத விலையைப் பெறக்கூடிய சிகரெட் புகையிலைப் பயிர் நடுகையில் யாழ். விவசாயிகள் அதிகநாட்டம் காட்டத் தொடங்கியுள்ளனர்"

இவ்வாறு இலங்கைப் புகையிலைக் கம்பனிப் போதனாசிரியர் திரு. ஏ. ஜி எஸ். பாலச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது;

யாழ்ப்பாணத்திலுள்ள கமக்காரர்களோ ஆரம்ப காலத்தில் புகையிலை நடுவதில் ஈடுபட்டு வந்தனர். இலங்கைப் புகையிலைக் கம்பனி ஆரம்பிக்கப்பட்ட பின்னர்தான் புகையிலை நடுகை இலங்கையின் மற்றப் பகுதிகளிலும் பரவியது. காலஞ்செல்ல புகையிலை பயிரிடுகை இலங்கையின் ஏனைய பாகங்களில் மிகவும் உச்சநிலையை அடைந்தது.



ஆனால் யாழ்ப்பாணத்தில் மற்றும் ஏனைய பயிர்களுடன் அது போட்டியிட்ட காரணத்தால் உச்சநிலையை அடைய முடியவில்லை இப்பொழுது மற்றப்பயிர்களின் மூலம் வரும் வருவாய்களை நிச்சயமாக நம்பமுடியாத காரணத்தால் உத்தரவாத விலையைப் பெறக்கூடிய சிகரட் புகையிலைப் பயிரிடுகையில் அதிகநாட்டங்காட்டத் தொடங்கியுள்ளனர்.

[2-ம் பக்கம் பார்க்க]

# ஜி. ஜி.யும் நானும்

— க. முருகரத்தினம் —

ஜி. ஜி. அமரராகி ஓராண்டு பூர்த்தியாகி விட்டது. அன்னார் கடந்த 40 வருட அரசியற் சேவையில் ஒற்றுமையின்றி, பலமின்றி, பலகூறுபட்ட தமிழ் இனத்தை அமரர் தந்தை செல்வநாயகத்தின் அறைகூவலுக்கும், வேண்டுகோளுக்கு மிணங்கித் தமிழர் கூட்டணி என்னும் ஒரு பலப்பட்ட, அசைக்க முடியாத ஒரு தனி அணியின் கீழ்க் கொண்டுவந்து அதில் தலைமைப் பீடங்களில் ஒன்றைத்தாங்கித் தமிழ்இனத்தை 'அடப்பன்கொடியும் திரண்டால் மிடுக்கு' என்ற நிலைக்குக் கொண்டுவந்து விட்ட சேவை, சிறப்புக்கும், பாராட்டலுக்கும் உரியதாகும். அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் மற்றும் மூவரும் சட்ட மறுப்பாகத் தமிழ் நாட்டுக் கோரிக்கைகளைப் பிரகடனப் படுத்தியதில் அவர்களுக்கு எதிராக 'ட்ரயல்-அற்-பார்' கோட்டில் தொடரப்பட்ட வழக்கில் அமரர் ஜி. ஜி. அவர்கள் ஏற்பட்டுச் சட்ட நுணுக்கங்களையும், மனிதாபிமான நுணுக்கங்களையும் இடித்துரைத்து திரு. அமிர்தலிங்கம் அவர்களையும் மற்றைய மூன்று சகாக்களையும் நிரபராதிகளாக்கி விடுதலை செய்வித்ததுடன், கோட்டில் அவருடைய இறுதித் தொகுப்புரையின் முடிவில் "தமிழினத்தின் கோரிக்கைகள் மறுக்கப்படுமிடத்து இலங்கையிலுள்ள தமிழ் இனம், இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்தது போற் பிரிந்து தமிழ்நாடமைப்பதை விட வேறு வழியில்லை' எனத் திட்டவட்டமாகவும் கூறிவைத்தார்.

அமரர் அவர்கள் என்னுடன் எப்போதும் மிக ஊடாட்டமாகவும், நெருங்கியும் அளவளாவுவதுவழக்கமாக இருந்து வந்தது. ஒருமுறை 1967-ம் ஆண்டு பருத்தித்துறையில் நடந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் 22-ம் மகாநாட்டில் அமரர் ஜி. ஜி. அவர்கள் பங்குபற்றிவிட்டு, யாழ்ப்பாணத்திலுள்ள பாம் கோட்டில் ஓய்வு எடுக்கும் நேரத்தில் நான் 'சேர்! உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்' என்று கூற அதற்கு அவர், 'கேள்' எனச் சொன்னர். நான் அதற்கு, 'உங்களுக்குப் பின் கிரிமினல் சட்டத்துறையிலும், அரசியலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஸ்தாபனத்திலும் உங்களிடத்தை நிரப்பக்கூடியவர்கள் யாவர்' எனக் கேட்டேன்.

உடனே அவர் சுங்கானை வாயிலிருந்து எடுத்துவிட்டுச் சிரித்துக்கொண்டு. இப்படியான கேள்விகளை இதுவரையும் என்னிடம் ஒருவரும் கேட்டதில்லை; அத்துடன் கேட்கவும் துணிய மாட்டார்கள்: ஆனல், நீ என்னிடம் துணிவுடன் கேட்டதையிட்டுச் சந்தோஷப்படுகின்றேன். என்று கூறிக், கிறிமினல் சட்ட நிபுணத்துவத்தில் எனக்குப் பின் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வாவும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் எனது இடத்தைக் கொண்டு நடத்துவற்கு உடுப்பிட்டி சிவாவும் தான்' எனக் கூறினர். அவரின் நினைவுபோல் திரு. மு. சிவசிதம்பரம் கட்சியின் தற்காலிகத் தலைவர் பதவியை ஏற்று ஒருவருட காலமாகச் சிறப்பாக நிவர்கித்து வருகின்றார்.

எல்லோரும் இன்று அமரருக்கு அஞ்சலி செலுத்தி நினைவு கூரும் வேளையில் தமிழினத்தின் இன்றைய இக்கட்டான நிலையில் அமரர் ஜி.ஜி.யின் நினைவுகளையும், கனவுகளையும் ஈடேற்றிச் செல்வதற்கும் அவரின் ஆத்மா சாந்தி அடைவதற்கும் அவரின் புதல்வன் திரு. குமாரும், அவரைச் சேர்ந்தவர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றேன்.

# விஸ்வமடு அகதி முகாமில் 'அமிர்'

[யாழ்ப்பாணம்]

'தமிழருக்கென தமிழ்ப்பிரதேசம் ஒன்று இந்நாட்டில் இருந்தபடியினல் தான் நீங்கள் சுதந்திரமாக இங்கு வாழக்கூடியதாக இருக்கிறது.

விஸ்வமடு, அக்கராயன்குள அகதிகள் முகாமிற்கு விஜயம் செய்த எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் அகதிகள் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

எதிர்க்கட்சித்தலைவரை அகதிகள் அன்போடுவரவேற்று அழைத்துச்சென்றனர். எதிர்க்கட்சித்தலைவருடன் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் அகதிகள் புனர்வாழ்வுச்சபை செயலாளர் திரு. எஸ். நடராசாவும் வந்திருந்தனர்.

அகதிகளின் கஷ்டங்களை போக்க உடனுக்குடன் அரசுடன் தொடர்பு கொண்டு உதவி செய்த எதிர்க்கட்சித் தலைவருக்கு திரு. நடராசா நன்றி தெரிவித்தார். [ஈ]

## மணிவிளக்கு

சூதானது தரித்திரத்துக்கு தாது. பொய்க்கு சகோதரம், களவு, சண்டை, முதலிய கீழ் தொழில்களுக்கு மாதா, சத்தியத்துக்கு சத்துரு என்போர் அறிவுடையோர்

- ஆறுமுகநாவலர்

# பாலஸ்தீன மக்களுக்கு தனிநாடு அவசியம் என்கிறார்

## இஸ்ரேலிய எதிர்க்கட்சித் தலைவர்

ஜெரூஸலம், பெப். 9

"தமக்கென ஒரு நாடில்லாத பாலஸ்தின மக்களுக்கு தனிநாடு ஒன்றை அமைத்துக் கொடுப்பது அவசியம்''.

இவ்வாறு இஸ்ரேலியஎதிர்க் கட்சித் தலைவர் திரு. பெரஸ் கூறியுள்ளார்.

ஜோர்டான் ஆற்றின் மேற்குக் கரையில் பாலஸ்தீன ராஜ்யம் ஒன்று அமைக்கப்படுவதன் மூலம் மத்திய கிழக்கில் நிரந்தர அமைதி ஏற்படுமெனத் தாம் நம்புவதாகவும் திரு. பெரஸ் கூறியுள்ளார்.

திரு. பெரஸின் இக்கூற்றை யடுத்து இஸ்ரேலிய ஆட்சி பீடத்திலும்மக்களிடையேயும் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித்தலைவரின் இக் கூற்று மத்திய கிழக்கில் அமைதிக்கான வாய்ப்புக்களை அதிகரித்துள்ளதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். [இ]

## ஆற்றில் பாய்ந்தது பஸ் 53 பேர் பலி!

புதுடில்லி, பெப். 9

உத்தரப் பிரதேசத்தில் பிரயாணிகள் பஸ் ஒன்று ஆற்றினுள் பாய்ந்ததை அடுத்து 53 பேர் பலியானார்கள் என அறிவிக்கப்பட்டது.

65 பிரயாணிகளுடன் சென்ற அரசுபோக்குவரத்து சேவை பஸ் ஜோன்பூருக்கு அருகே ஆற்றில் பாய்ந்தது. இவ்விபத்தில் 12 பேர் படுகாயமடைந்தனர். (இ)

## விண்வெளி ஆய்வுகூடத்திற்கு எரிபொருள் விநியோகம்

### சரக்குக்கலம் பூமி திரும்பியது

மாஸ்கோ, பெப். 9

விண்வெளியில் ஆய்வு நடத்திவரும் சோவியத் ஆய்வுகூடமான சல்யூட்-6' 'சல்யூட்-21' ஆகிய விண்கலங்களுக்குத் தேவையான எரிபொருட்களை ஏற்றிச் சென்ற 'சரக்கு விண்கலம்' எரிபொருட்களை விநியோகித்துவிட்டு பூமி திரும்பியுள்ளது.

இச் 'சரக்கு விண்கலம்' திட்டமிட்டபடி வெற்றிகரமாக இயங்கியுள்ளதென்று விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

பூமிக்குத்திரும்பிய'சரக்கு விண்கலம்' பசுபிக்சமுத்திரத்தில் விழுந்து மறைந்துவிட்டதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர். [இ]

# காங்கிரஸார் சிறையில் தள்ளப்படுகின்றனரா?

## இந்திராவின் கூற்றுக்கு சரண்சிங் மறுப்பு

பெங்களூர், பெப். 9

வடஇந்தியாவில் பல இடங்களில் காங்கிரஸ்காரர்கள் எதுவித காரணமுமின்றி தாக்கப்பட்டு சிறையில் தள்ளப்படுகின்றனரென்று முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதிஇந்திரா காந்தி மேடைகளில் கூறிவருகிறார். இக்கூற்றுக்கள் அப்பட்டமான பொய்.

இவ்வாறு இந்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் பெங்களூரில் நடைபெற்றகூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

நெருக்கடி அட்டூழியங்கள் தொடர்பான விசாரணைகள் காலதாமதமானாலும் திருமதி காந்தியும், அவரதுசகாக்களும் சட்டத்தின் கரங்களிலிருந்து தப்பமுடியாது. [இ]

## யாழ். மாநகர தெங்கு பனம்பொருள்

# கூட்டுறவு ஊழியர் இன்று அடையாள வேலைநிறுத்தம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகர தெங்குப் பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் இன்று வேலை நிறுத்தத்தில் குதிக்கின்றனர். இன்று காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை இவர்கள் அடையாள வேலை நிறுத்தம் செய்வர்.

தாம் முன்வைத்த ஆறு கோரிக்கைகளுக்கும் இதுவரை நிர்வாகம் எவ்வித முடிவும் தெரிவிக்காததைத் தொடர்ந்து தமது அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில் இவ் அடையாள வேலை நிறுத்தம் நடைபெறவிருப்பதாகவும், இதன் பின்பும் தமது கோரிக்கைகள் பற்றி நிர்வாகம் கவனம் எடுக்காத பட்சத்தில் இம்மாதம் 13-ம் திகதி தொடக்கம் பொது வேலைநிறுத்தம் நடைபெறும். இலங்கை தெ ப பொ உற்பத்தி விற்பனவுச் சங்க ஊழியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. வி. ஜி. தங்கவேல் தெரிவித்தார். இதனையும் நிர்வாகம் அலட்சியம் செய்யும் பட்சத்தில் வடபகுதியிலுள்ள 19 சங்கங்களைச் சேர்ந்த ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் இறங்க வேண்டிய நிலை ஏற்படுமென்றும் திரு. தங்கவேல் தெரிவித்தார்.

ஊழியர் தோப்பினை அங்கீகரித்தல், காரணமின்றி ஊழியரை வேலை இடைநிறுத்தம் செய்தல், அடிப்படைச் சம்பள உயர்வு முதலான ஆறு கோரிக்கைகளை யாழ். சங்க ஊழியர்கள் நிர்வாகத்திற்குச் சமர்ப்பித்திருந்தனர் (அ.)

## சந்தேகநபர் பிடிபட்டார்

[சங்கானை]

பட்டப்பகலில் சங்கானையில் வீடொன்றில் தங்க நகை களவாடியதாகக் கூறப்படும் ஒருவரை யாழ்ப்பாணத்தில் வைத்து பொலிசார் கைது செய்துள்ளனர்.

சங்கானை மடத்தடியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை பரிபூரணம் நாகலிங்கம் என்பவர் வீட்டில் பகல் நேரத்தில் கவரினால் ஏறிவீட்டினுள் புகுந்து அங்கிருந்த தங்கக்காப்பு ஒன்றையும் ரொக்கப்பணம் 61 ரூபாவையும் திருடினாராம்.

நமசிவாயம் சிவஜோதி [வயது 17] என்ற இந்த இளைஞனை [யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு] வீட்டில் வைத்து யாழ். பொலிசார் சந்தேகத்தின்பேரில் கைது செய்து அவரிடமிருந்த தங்கக்காப்பையும் கைப்பற்றிசங்கானைப் பொலிஸில் ஒப்படைத்தனராம்.

சந்தேகநபர் நீதிபதிமுன் ஆஜர் செய்யப்பட்டு இம் மாதம் 15-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (உ)

## நாட்டுக் கூத்து ஒலிப்பதிவு

[அரியாலை

இலங்கை வானொலி நாட்டுக் கூத்து நாடக மேடைப் பாடல் குழுப் பொறுப்பாளர் திரு. ஆ. தாசீசியஸ் தலைமையில் யாழ்ப்பாணம் வந்திருந்த குழுவினர் அரியாலை காந்தி சனசமூக நிலைய வெள்ளி விழா அரங்கில் வைத்து கோண்டாவில் கிழக்கு அண்ணாவி நாகமுத்து செட்டியாரின் தயாரிப்பில் உருவான "அலங்கார ரூபன்', என்ற நாட்டுக்கூத்தையும், அரியாலையூர் அண்ணாவி சி. சின்னையாவினால் நெறிப்படுத்தப்பட்ட 'சகாதேவன் வெற்றி' என்ற காதவழிக் கூத்தையும், அரியாலையூர் கூத்திசைவல்லுநர் திரு. ப. கார்த்திகேசுவின் தயாரிப்பில் உருவான 'குசலவன்' நாட்டுக் கூத்தும் ஒலிப்பதிவு செய்யப்பட்டன.

ஒலிப்பதிவுக்குப் பொறுப்பாக திரு. வாசகர் பணியாற்றினார். (அ)

## அண்ணா நினைவுதினம் படமாகியது

சென்னை, பெப். 9

பத்துலட்சம் மக்கள் கலந்துகொண்ட அண்ணா நினைவு தின விழாவும், வள்ளுவர் கோட்டம் சிலைதிறப்பு விழாவும் வர்ணக்கலரில் படமாக்கப்பட்டுள்ளன.

ஊர்வலம்வந்த பாதைகளான, காமராஜர் சாலை, வாலஜா சாலை, அண்ணாசாலை, கோடாம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் ஆகிய பகுதிகள் படமாக்கப்பட்டன. [கெ-இ]

"அழைக்கின்றார் ஐயா... அழுகின்றார் அண்ணா...''

# அன்று கிண்டல் செய்தவர் இன்று புகழ் பாடுகிறார்

## கருணாநிதியை சாடுகிறார் எம்.ஜி.ஆர்.

சென்னை, பெப் 9

'1949-ம் ஆண்டு அறிஞர் அண்ணா தி. மு. கவை ஆரம்பித்தகாலத்தில் அழைக்கின்றார் ஐயா ... அழுகின்றார் அண்ணாதுரை என எதிர்ப்புத் தெரிவித்தவர் தான் இந்த கருணாநிதி, இப்போது அண்ணாபுகழ்பாடுகிறார்.

இவ்வாறு சென்னை மரினா கடற்கரையில் நடைபெற்ற அண்ணா நினைவு தினக்கூட்டத்துக்கு தலைமைவகித்துப் பேசிய தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தி. மு. கழகத்தை கட்டியெழுப்ப கலைஞருக்கும் அன்பில் தர்மலிங்கத்துக்கும் கணக்கில்லாமல் பணம் கொடுத்தவரும் அண்ணா தான். சுயநலத்துக்காக அரசியல் லாபம் தேடியவர்கள் அண்ணாவின் புகழ்பாடுவதில் அர்த்தமில்லை யென்று கூறினார். [கெ-இ]

## புதிய கூட்டுத்தாபனம்

[கொழும்பு]

விவசாயத்தைப் பன்முகப் படுத்தவும் குடியேற்றங்களைக் கவனிக்கவும் புதிய தேசிய கூட்டுத்தாபனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை விவசாய அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

கெற்பேலி கொலைவழக்கு:

# 4 எதிரிகளுக்கும் கடூழிய சிறைத் தண்டனை

(யாழ்ப்பாணம்]

கெற்பேலி கொலைவழக்கில் 1-ம் எதிரிக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 2-ம் எதிரிக்கு 8 வருட கடூழியமும் 3-ம் 4-ம் எதிரிகளுக்கு தலா 7 வருட கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் கெற்பேலியில் 75-ம் ஆண்டு செப்டம்பர் 27-ம் திகதி கணேசலிங்கம் நாகராசா, நடராசா, சுந்தரலிங்கம் ஆகியோர் கணபதிப்பிள்ளை கந்தையாவை கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். யோகநாதன் சட்டத்தரணி வி. விபுலானந்தராசாவின் அனுசரணையுடன் ஆஜரானார் அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். ஐ. கனகரத்தினம் ஆஜரானார்.

ஐ ரிசபையினர். எதிரிகள் கைமோசக் கொலைக்கு குற்றவாளிகள் என்று ஏகமனதாக தெரிவித்ததைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது. (க(

# ஸ்கூட்டர் டயர்கள் உள்ளூரில் தயாரிக்கப்படும்

[கொழும்பு]

இலங்கை டயர் கூட்டுத்தாபனம் விரைவில் ஸ்கூட்டர் டயர்களைத் தயாரிக்கவுள்ளது.

அடுத்த மாத இறுதிக்குள் இங்கு உற்பத்தி ஆரம்பிக்கப்படும் என்றும் இதற்கான இயந்திர சாதனங்கள் ஏற்கனவே இங்கு பொருத்தப்பட்டுள்ளன என்றும் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் கூறினார். [இ]

சிப்
நவீன
மலகூடச் சுத்தமாக்கி




சிப் கொண்டு உங்களது மலகூட வட்டகைகளைச் சுத்தஞ் செய்யுங்கள். அது கறைகளை அகற்றி, தொற்றுத் தடை அளித்து, காற்றைச் சுத்தமாக்குகிறது. செப்ரிக் தாங்கிகளுக்கும் உகந்தது.
இப்பொழுது அழகிய கறுப்பு அடைப்பிகளிற் கிடைக்கிறது.
மற்றொரு தரமான லங்கெம் தயாரிப்பு

**Regal** (Jaffna) Crowded 2 nd week
Daily 4-45, 7-00 & 9-30 p. m.
Hayley Mills Hywel Bennett
in
**TWISTED NERVE**
(color)

**RIO** (Jaffna) Daily 4 Shows
2-nd Crowded week
**HIGH VELOCITY**
(Scope Color) (Adults)
வியட்நாம் விடுதலைவீரரின் புரட்சித் திட்டங்களுக்கு எதிராக இரண்டு கூலிப்பட்டாள வீரர் நடத்திய யுத்தம்

50-வது நாளைநோக்கி வெற்றிநடைபோட்டு ஓடுகிறுள்
**ஸ்ரீதர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்தி
**இன்ஸ்பெக்டர் மனைவி**
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.
குறிப்பு: கடைசி இரு வாரங்கள் மட்டும்

2-வது வெற்றி மாதம்
**ராணி** வி. பி. கணேஷன் — சுமாக்ஷினி
ராம்தாஸ் — ஜெனிட்டா
(யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
**நான் உங்கள் தோழன்**
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**மனோஹரா** (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—விஜயலக்ஷ்மி நடித்த
**வல்லவன் ஒருவன்**

**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஓம். விஜயா
**மூன்று முடிச்சு**
திரைக்கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

தினசரி: 10-30, 2-30-6-30, 9-30
**ராஜா** ஜெய்சங்கர் கே.ஆர்.விஜயா சோ
(யாழ்ப்பாணம்) விஜயகுமார் மனோகர்
நடித்த
அசோகா பிரதர்ஸ்
அளிக்கும்
அபிராமி மூவீஸ்




திரைக்கதை வசனம் டைரக்ஷன்:
மதுரை திருமாறன்
இசை:
எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடல்கள்:
கண்ணதாசன்-வாலி
ராமச்சந்திரன்

# "கார்ணிவல் வாசலில் பொலிஸார் சண்டைக்குச் சென்றனர்"

## சன்சோனி கமிஷன்முன் 'அமிர்' சாட்சியம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் சாட்சிய மளிக்கையில் மேலும் கூறியதாவது:

"யாழ்ப்பாணத்தில் நடந்த கார்ணிவலின்போது 12ம்தேதி 7 பொலிஸ்காரர்கள் டிக்கட் இல்லாமல் உள்ளே செல்ல முயன்றுர்கள். வாசலில்நின்றவர் அவர்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. பின்பு அவர்கள் டிக்கட் எடுத்துக் கொண்டு உள்ளே சென்றுர்கள். அவர்களில் மது அருந்திய நிலையிலிருந்த ஒருவர், வாசலில் நின்றவருடன் வலியச் சண்டைக்குச் சென்றபோது மக்கள் கூடிவிட்டார்கள். ஆனல் வாசலில் நின்றவர், 'நான் பார்த்துக்கொள்கிறேன்' எனக் கூறிச் சமாளித்துக் கொண்டார்.

மறுநாள் கார்ணிவல் அமைப்பாளரான டாக்டர் பிலிப், இச் சம்பவம் பற்றி யாழ்ப்பாணம் எம். பி.யுடன் தொடர்புகொண்டு, பொலிசாரைக் கார்ணிவலுக்கு வராமல் ஏற்பாடு செய்யுமாறு கூறினர். யாழ்ப்பாணம் எம். பி. தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டருடன் தொடர்பு கொண்டபோது, பொலிசார் வரமாட்டார்கள் என அவர் உறுதியளித்தார். பொலிஸ் அதிபர் கார்ணிவலுக்குப் பொலிஸாரைப் போகவேண்டாமென ஏற்கனவே பணித்துள்ளதாகவும் கூறினர். 13ம்தேதிதான் கார்ணிவல் கடைசிநாள்.

### சிவில் உடையில்

அன்று சிவில்உடையில் இரு பொலிசார், ஆனைக்கோட்டையிலிருந்தும், சாவகச்சேரியிலிருந்தும் கார்ணிவலுக்கு வந்திருந்தார்கள். கார்ணிவலுக்குள் ஒரு கடைக்குள் நடந்த சம்பவத்தில், இரு பொலிசாரும் தாக்கப்பட்டு காயமடைந்தனர். ஒருவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலும், மற்றவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டார்கள்.

### அப்பாவி மக்கள் தாக்கப்பட்டனர்

14ம் தேதி காலைமுதல் அப்பாவி மக்கள் யாழ்ப்பாணத்தில் பலஇடங்களிலும் பொலிசாரினல் தாக்கப்பட்டனர். முனியப்ப கோவிலுக்கருகில் லொறிச்சாரதி தாக்கப்பட்டார். எல்லா இடமும் தாக்குதல் நடந்தது. 14ம் தேதி நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து 15ம் தேதி அதிகாலை இ. போ. ச. ஊழியர் யேசுதாசன், பஸ் டிப்போவிற்குச் செல்லும் வழியில் பொலிசாரால் தாக்கப்பட்டார். முற்றவெளிப்பகுதியில்தாக்கப்பட்ட இவருடன் மற்றும் 3 பேர் ஆஸ்பத்திரியில் பொலிஸ் தாக்குதலுக்குள்ளாகி அனுமதிக்கப்பட்டனர். இதுபற்றி யாழ்ப்பாணம் எம். பி. க்கு அறிவிக்கப்பட்டது.

### யோகேஸ் தந்தி

யாழ். எம். பி. உடனடியாகப் பொலிஸ் அதிபருடன் தொடர்பு கொள்ள முடியாமல் போய்விட்டது. அதனல் அவர் பொலிஸ் மா அதிபருக்குச் சம்பவம் பற்றித் தந்தியொன்றை அனுப்பினர். பிரதிபாதுகாப்பு அமைச்சர் திரு. வெரப்பிட்டியாவுக்கும் தந்தி அனுப்பினர். அத்தந்தியில் பொலிசார் அப்பாவிமக்களைத் தாக்குகிறுர்கள் 3 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உடனே விசாரணை செய்யுங்கள். பதட்டநிலைநிலவுகிறது. நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவருமாறு பொலிஸ் அதிபரை பணியுங்கள். என்று இருந்தது.

15ம் திகதி வெளிநாட்டு நிருபர்கள் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையின் வீட்டில் கூடியிருந்தார்கள். அப்பொழுது சுன்னுகத்திலிருந்தும் மற்றும் இடங்களிலிருந்தும், இளைஞர்கள் வந்து பொலிசார் வீட்டுக்குள் புகுந்து தாக்குவதாக கூறினர்கள். நான் பொலிஸ் அதிபருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அவரது 'போன்' பழுதடைந்திருந்தது. பின் பொலிஸ் நிலையத்திற்கு 'போன்' செய்து பொலிஸ் அதிபருடன் வீட்டுக்குப் பேச விரும்புவதாகக் கூறியபோது அவரது இணைப்புப் பழுதடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. இந்த நிலைமையில் அவரின் வீட்டிற்கே செல்லவேண்டிய நிலைமை;

"பொலிஸ் அதிபரின் வீடு யாழ்ப்பாணம் கோட்டைக்குள் இருக்கிறது. வாசலில் பொலிசார் காவல் செய்கின்றுர்கள். எவரும் உள்ளேபோக அனுமதியில்லை. எம். பி. க்கும் கூட அந்த நிலைதான்.

### 6 மாதத்தின்முன் நடந்தது

"ஆகஸ்ட் சம்பவத்திற்கு 6 மாதத்திற்கு முன்னர் நானும் திரு. செல்லத்தம்புவும், சில சட்டத்தரணிகளும் விடுதலையான சில இளைஞரை வரவேற்கச் சென்றபோது வாசலில் நாங்கள் தடுக்கப்பட்டோம். பொலிசார் கற்களை வீசினர்கள்."

கமிஷனர்: எத்தனை மாதத்திற்கு முன்பு?

அமிர்: 6 மாதத்திற்கு முன்பு நடந்தது. காரைத் திருப்பிக்கொண்டு வந்தபோது பொலிஸ் விடுதிப் பகுதியில் கற்களும் தடிகளும் காருக்கு வீசப்பட்டன. திரு. விஸ்வநாதனின் கார் சேதமடைந்தது. நாங்கள் வந்து பொலிஸ் நிலையவாசலில் காரை மறித்துவிட்டுப் புகார்செய்யச் சென்றேம். காரில் எனது மனைவியும் இருந்தார். நான் பொலிஸ் அதிபருக்குப் புகார் செய்யச் சென்றேன்; அவர் அலட்சியமாக றிசேவ் பொலிசில்புகார் செய்யுமாறு கூறினர். நன் புகார் செய்துகொண்டிருந்தபோது பொலிஸ் விடுதிகளிலிருந்தும் யாழ்ப்பாணம் ஸ்ரேடியத்தில் தங்கியிருந்த பொலிசார் சுமார் 150 பேரும் ஓடிவந்து எனதுகாரைத் தாக்கிச் சேதப்படுத்தினர்கள். கார் அருகில் நின்ற ஒருவர் பலத்த காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். நான் போனபோது உதவிப் பொலிஸ் அதிபர் முன்னிலையில் நானும் பொலிசாரால் தாக்கப்பட்டேன்' அந்தப் பொலிசார் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்தின் காரணமாகத்தான் அந்த இரவுநேரத்தில் நான் கோட்டைக்குள் குடியிருக்கும் பொலிஸ் அதிபரைச் சந்திக்க செல்லவில்லை. உதவிப்பொலிஸ் அதிபர் நார்டினுடன் தொடர்பு கொண்டு நிலைமைபற்றிக் கூறினேன். அவர் சுன்னுகம் பொலிசுடன் தொடர்பு கொண்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவருவதாக கூறினர்.

### பலஇடங்களில்தாக்குதல்

16-ம் திகதி அதிகாலை பொலிசார் பல இடங்களில் தாக்குதல் நடத்தினர்கள். கராச்சில் நின்ற கார் கண்ணடிகள் சேதப்படுத்தப்பட்டன. காங்கேசன்துறை வீதிமுதல் ஆஸ்பத்திரி வீதிவரை சேதம் விளைவித்தனர். அன்றிரவு பழைய மார்க்கட்டில், மண்ணெண்ணையோ, பெற்றேலோ எனக்கு தெரியாது எரிக்கக் கூடியபொருளில் ஊற்றி தீ வைத்தார்கள். கடைக்காரர்கள் அங்கு படுத்திருந்ததினல் உடனே எழும்பித் தீயை அணைத்தார்கள்.

(6-ம் பக்கம் பார்க்க)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
ஜெய்சங்கர் - சுஜாதா
**நீ ஒரு மகாராணி**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-45,
**நினைத்ததை முடிப்பவன்**

**நாகமஸ்**
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-0
சிவாஜி - வாணிஸ்ரீ
**சிவகாமியின செல்வன்**

இப்பொழுது 2வது வாரமாக வெற்றிநடைபோடுகிறது
**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி-சரோஜாதேவி- வாணிஸ்ரீ- நாகேஷ்
K. பாலசந்தரின்
**"தாமரை நெஞ்சம்"**
(புதிய பிரதி)
சிறுவர்களுக்கான ஆங்கிலப் படம் 11, 12-2-78 சனி, ஞாயிறு காலை 8-30 மணிக்கு மட்டும்
**Treasure Island** (Cartoon)
எங்கள் அனைவருக்கும் அரைக் கட்டணம்; பள்ளிக்கூடங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்—நிர்வாகம்

**வெலிங்டன்** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
**கணவன்**

**லிடோ** போன் 7693
(யாழ். நகர்) முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
**உறவு சொல்ல ஒருவன்**
காலை 9-00 காட்சியுடன் ஆரம்பமாகி தொடர்ந்து காட்சிகள் காண்பிக்கப்படும்

# "தீவைத்தவர்கள் பொலிஸ் 'ட்ரக்'கில் ஏறிச்சென்றனர்"

[5ம் பக்கத் தொடர்ச்சி]

பொலிசார் பெயர்ப்பலகைகளை உடைத்தார்கள். ஆஸ்பத்திரி சந்திவரை பல கடைகள் அடித்து நொருக்கப்பட்டது. 'சுபாஸ்கபே'யும் தாக்கப்பட்டது. சிறிது நேரத்தால் பொலிஸ் டிரக் வந்தது. அதில் வந்தவர்கள் ஆட்களை அடையாளம் காட்டுவீர்களா? என கடைக்காரர்களைக் கேட்டார்கள். காக்கி காற்சட்டையும் பெனியனும் அணிந்து வந்தார்கள். அவர்கள் பொலிசார் எனக் கடைக்காரர்கள் கூறினார்கள்.

பொலிஸ் ட்ரக் றீகல் தியேட்டரடியில் சென்றபோது தீவைத்தவர்களும் அதில் ஏறிச் சென்றார்கள். அந்த பொலிஸ் ட்ரக்கின் நம்பரும் கிடைத்திருக்கிறது அப்படியான நிறத்திலும் அப்படியான அமைப்பிலும் வேறு ட்ரக் யாழ்ப்பாணத்தில் கிடையாது.

## பழைய மார்க்கட்

பழைய மார்க்கட் தீவைப்பு பற்றி யாழ்ப்பாணம் எம். பி. திரு. வி. யோகேஸ்வரனுக்கு அதிகாலை 5 மணிக்கு போன் செய்து சொன்னார்கள். அவர் உடனே எனக்குத் தொலைபேசியில் காலை 6 மணிக்குத் தெரிவித்தார். நிலைமை மோசமாகிறது உடன் நடவடிக்கை எடுங்கள் என்று எனக்குக் கூறினார். நான் பொலிஸ் அதிபருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டேன். முன்பு போல் அவரது தொலைபேசி பிழையாகியிருந்தது.

நான் பிரதம மந்திரியுடன் காலை 7 மணிக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு சம்பவம் பற்றிக் கூறினேன். பொலிஸ் மாஅதிபருடன் தொடர்புகொண்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவருமாறு அவர் கூறியதாகச் சொன்னார்.

## எஸ் பி. யுடன் தொடர்பு

நான் மீண்டும் யாழ். பொலிஸ்நிலையத்திற்கு டெலிபோனில் பொலிஸ் அதிபருடன் தொடர்புகொள்ளமுயன்றேன் பின் பொலிஸ் அதிபரை என்னுடன் தொடர்புகொள்ளச் சொல்லுமாறு பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தேன். 5 நிமிடத்திற்குள் பொலிஸ் அதிபர் என்னுடன் தொடர்புகொண்டார். 5 நிமிடத்திற்கு முன்னுல் பழுதடைந்திருந்த அவரது தொலைபேசி திடீரென வேலைசெய்தது.

## எங்கே பிழை?

பொலிஸ் அதிபருக்கு நிலைமையைக் கூறினேன். யாழ்ப்பாணத்தில் இப்படி நிலைமையிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது என்றார். 10 மைல்களுக்கு அப்பால் இருக்கும் எனக்கு தெரிந்த விஷயம், யாழ்ப்பாணத்திலிருக்கும் அவருக்கு யாழ்ப்பாணத்தில் நடந்த விஷயம் தெரியவில்லை என்றார். தனது தொலைபேசி பிழையாக இருக்கவில்லையென்றும், எந்நேரமும் சரியாகவே இருந்ததாகவும் கூறினார். பொலிஸ் நிர்வாகத்தில் எங்கோ பிழையிருக்கிறது, அதனை நீங்களே கவனிக்கவேண்டும் என்றேன். பின் நான் பொலிஸ் அதிபரை சந்திக்கப் புறப்பட்டேன் வழியில் மாணவர்கள் பொலிசார் தாக்குவதாகவும் சைக்கிள்களை உடைப்பதாகவும் கூறினார்கள். பொலிஸ் அதிபர் காரியாலயத்திற்குச் சென்றேன். அங்கு உதவிப்பொலிஸ் அதிபர் நூர்தீன் இருந்தார். சிலரால் தன் ஜீப் தாக்கப்பட்டதாகக் கூறினார் நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸ் கோஷ்டி அனுப்பப்பட்டதாக அவர் சொன்னார்.

கமிஷனர்: உதவிப்பொலிஸ் அதிபர் பெயரென்ன?

அமிர்: நூர்டீன். அங்கு நான் இருந்தபோது பொலிஸார் பொலிஸ் அதிபருக்கு போன்செய்து நிலைமையைக் கட்டுப்படுத்த துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும், இருவர் கொல்லப்பட்டதாகவும் கூறினார்கள். காலை 8 அல்லது 8-30 மணிக்கு அச்சம்பவம் நடந்தது.

## புத்தூர் சம்பவம்

14-ம் தேதி புத்தூரில் ஒரு சூட்டுச் சம்பவம் நடந்தது. சயிக்கிளில் சென்ற சிலர் ரோந்து சுற்றச்சென்ற பொலிசார்மீது சுட்டதனால் ஒரு பொலிஸ்காரர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அதனையும் பொலிஸ் காரியாலயத்தில் தான் அறிந்தேன்.

## இருவர் சுடப்பட்டனர்

2 பேர் யாழ் நகரத்தில் சுடப்பட்டுவிட்டதாக அறிந்து நான் நிலைமையை நேரில் பார்க்க விரும்பினேன். யாழ்ப்பாணம் எம். பி. வீட்டிற்குப் போனேன். பழைய மார்க்கெட் முற்றாக எரிந்துவிட்டதாகவும், நவீன மார்க்கெட்டில் சிலபகுதி எரிந்துள்ளதாகவும் அங்கு அறிந்தேன். மலேயா கபேக்கு முன்னுல் உள்ள ஜவுளிக்கடைகளும் எரிந்துள்ளதாக அறிந்தேன்.

பிரதமருக்கு மீண்டும்தொலைபேசியில் தொடர்புகொண்டு நிலைமைபற்றி அறிவிக்க முயற்சித்தேன். பிரதமர் இல்லை. பாதுகாப்பு அமைச்சர் இருந்தார். அவரிடம் நிலைமையைக் கூறினேன். பொலிஸ் மாஅதிபரும், இராணுவத் தளபதியும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் திரு. ஜெயசிங்காவும் நிலைமையை நேரில் பார்க்க விமானத்தில் யாழ்ப்பாணம் வருவதாக அவர் கூறினார்.

நானும் யாழ்ப்பாணம் எம். பி. திரு. வி. யோகேஸ்வரனும் முன்னுள் யாழ் மேயர் திரு. எஸ். நாகராசாவும் என்ன நடக்கிறதென்று பார்க்க மார்க்கெட் பக்கம் போனோம்.

## பொலிஸார் தடை

ஆயுதம் தாங்கிய பொலிஸார் ஆஸ்பத்திரிவீதியில் தடைபோட்டிருந்தனர், மக்கள் கூட்டமாக அப்பால் நின்றார்கள். நாங்கள் மார்க்கட் பக்கம் போக அங்குநின்ற பொலிஸார் துப்பாக்கியை நீட்டி எங்களைச் சுடவந்தார்கள். அங்குநின்ற தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. குணசேகரா 'சுடவேண்டாம், சுடவேண்டாம்' எனச் சத்தம்போட்டுக்கொண்டு ஓடிவந்தார். நாங்கள் அதன்பின் காரிலிருந்து இறங்கி மார்க்கட் பக்கம் சென்றோம்.

## குண்டு வீசப்பட்டது

நெருப்பை அணைக்கப்பொலிஸார் எவரும் முயற்சிக்கவில்லை. நெருப்பை அணைக்கச் செல்பவர்களையும் பொலிஸார் தடுத்துக்கொண்டு நின்றனர், மக்கள் எவரையும் கிட்டச் செல்ல அனுமதிக்கவில்லை. ரோட்டால் நடந்துசென்றோம். உதவிப்பொலிஸ் அதிபரும் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் நின்றனர். ஏ. எஸ். பி. நூர்தீன் குண்டு வீசப்பட்டதாகக் கூறினார். குண்டு வீசிய இடத்தைக்காட்டுவீரா? நீர்கண்டீரா? எனநான் ஏ எஸ் பியைக்கேட்டேன். நான்காணவில்லை. தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் கூறினார் என்றார். நான் பின் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டரை, குண்டு வீசியதைக் கண்டீரா? என்று கேட்டேன். தான் காணவில்லை என்றார். ஏ. எஸ் பி கேட்டதால் அப்படி கூறினேன் என்றார். ஏன் இப்படி சொல்கிறீர்கள் என்றேன். பாராளுமன்றத்தில் இதுபற்றி தெரிவிப்பேன் என்றேன். எனக்குப் பக்கத்தில் நின்ற பொலிஸ்காரர் ஒருவர் துப்பாக்கிழனையால் அடித்தார். மற்றொருவர் கையால் அடித்தார். இருவரையும் நான் பார்த்தேன். அவர்கள் காக்கி யூனிபோம் அணிந்திருந்தார்கள். ஆனல் அடையாளத்தை குறிக்கும் நம்பர் இல்லை. உயர் பொலிஸ் அதிகாரிகள் முன் அவர்கள் நம்பர் இல்லாமலே நின்றார்கள்.

# "சுடவேண்டாம் என்று

## இன்ஸ்பெக்டர் கூறினார் பொலிஸார்

## நான்கு தடவைகள் சுட்டனர்"

## மக்கள் சத்தமிட்டனர்

சுமார் 200 யாருக்கு முன்னுல் நின்ற மக்கள் கூட்டத்தினர் எனக்கு அடி விழுந்ததைக் கண்டதும் உணர்ச்சி வசப்பட்டு சத்தமிட்டனர். யாழ்ப்பாணம் எம். பி, அவர்களுக்கு கிட்டச்சென்று அமைதியாக கலைந்துசெல்லுமாறு கூறினார். எனக்கு பின்னுல் பொலிஸார் 4 தடவை மக்கள் கூட்டத்தை நோக்கி சுட்டனர் உதவிபொலிஸ் அதிபரும் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டரும் 'சுடவேண்டாம் சுடவேண்டாம்' எனக் கூறினார்கள். யாழ் பொலிசாரின் கட்டுப்பாடு இப்படி இருந்தது. சுடவேண்டாம் என பொலிஸ் அதிபரே மன்றாடவேண்டியிருந்தது. நாங்கள் அவ்விடத்தை விட்டுப் போனோம்.

## தீயணைக்கும்படை வந்தது

காங்கேசன் துறைக்கும் இராணுவத்திற்கும் தொடர்புகொண்டு நடந்தவற்றை சொன்னோம். அதன்பின் தீயணைக்கும்படை வந்துசேர்ந்தது.

அன்று மாலை பொலிஸ் மா அதிபரும், இராணுவ கடற்படைத் தளபதிகளும், பாதுகாப்பு அமைச்சு செயலாளர்களும் வந்தனர். மாநாடு நடந்தது. நிலைமையை கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர ஊரடங்குச்சட்டம் போட முடிவுசெய்யப்பட்டது. இம்மாநாட்டில் கலந்துகொண்ட எம். பிக்கள், ஊரடங்கு சட்டம் போடுவதற்கு ஆட்சேபம் தெரிவித்தோம். பொலிஸாரே குழப்பத்தை ஏற்படுத்தினர் என்றும், ஊரடங்குச்சட்டம் போடப்பட்டால் பொலிசார் தாங்கள் நினைத்தமாதிரியாக நடக்க அனுமதி வழங்கியதாக முடியும் என்று சுட்டிக்காட்டினோம். எங்கள் ஆலோசனைகளை மாநாட்டில் ஏற்றுக்கொண்டனர். ஊரடங்குச் சட்டம் போடப்படவில்லை. இரவில் பொலிஸ் ரோந்து வாபஸ்பெறப்பட்டு இராணுவ ரோந்து போடப்படவேண்டும் எனக் கூறினோம்.

## சிங்கள மாணவர்கள்

இம் மாநாட்டில் யாழ் வளாகத்திலுள்ள சிங்கள மாணவர்கள் பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. டாக்டர் லூதர் ஜெயசிங்கா, மற்றொரு பேராசிரியரும் மாநாட்டிற்கு வந்திருந்தார்கள். வளாகத்தில் பதட்டநிலை உள்ளதாகவும், சிங்கள மாணவர்களை அப்புறப்படுத்தவேண்டும் என்றும் கூறினார்கள்,

தமிழ் - சிங்கள மாணவர்கள் வழக்கம்போல் நண்பர்களாகவே இருப்பதாகவும், தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களுக்கு பாதுகாப்பளிக்க தயாராக இருப்பதாகவும் கூறினோம். வெளியில் இருந்துதான் ஏதாவது தாக்குதல் சம்பவம் நடைபெறலாமென்று அச்சம்தெரிவிக்கப்பட்டது.

வளாக வாசலுக்கு இராணுவ காவல் போடுவதென்றும், நிலைமையை மறுநாள் அவதானிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

16ம் தேதி இராணுவத்தினர் ரோந்து சுற்றியபோது எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை.

## மீண்டும் கலவரம்

17-ம் திகதி காலை பொலிசார் மீண்டும் கடமைக்கு வந்தபோது, கலவரம் மீண்டும் ஆரம்பமானது. பொலிஸ் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக மரணவிசாரணை இருக்கிறது. ஆதலால் அது பற்றி விபரமாக கூறவில்லை.

17ம் திகதி எம் பிக்கள் யாழ் வளாகத்திற்குச்-சென்று மாணவர்களுடன் நேரில் பேசவேண்டும் என்றும், நிலைமையை நேரில் பார்க்கவேண்டும் என்றும் முடிவாகியது.

எம் பிக்களான திரு. ராஜலிங்கமும், வி. தர்மலிங்கமும், கே. துரைரத்தினமும் காரில் யாழ் வளாகம் நோக்கிச்சென்றார்கள்.

## கொடியை கிழித்தனர்

நாகவிகாரையில் நின்ற பொலிஸார் காரைப் போகவிடாமல் தடுத்தார்கள். காரிலிருந்த கொடியை பிடுங்கி கிழித்தார்கள். திரும்பிச் செல்லுமாறு கூறினார்கள். எம். பிக்கள் என்னிடம் வந்து புகார் செய்தார்கள். 16-ம் திகதி நடந்த மாநாட்டில் டி. ஐ ஜி. திரு. அனே செனரத்தினவும் அனுராதபுரம் எஸ். பியும் வந்திருந்தனர். யாழ். பொலிஸ் அதிபர் நடத்தை பற்றி டி ஐ ஜி.யிடம் கூறினோம். அவர் யாழ்ப்பாணத்திற்கு பொறுப்பாக அனுராதபுரம் எஸ். பி யை நியமிக்கவிருந்தார்.

டி. ஐ ஜியுடன் நாங்கள் தொடர்புகொண்டு நாகவிகாரையினுல் செல்லும் கார்களை பொலிஸார் சேதப்படுத்துவதாக கூறினோம். டி. ஐ. ஜிக்கு நாங்கள் புகார் செய்தபின் நாகவிகாரையால் சென்ற எல்லாக் கார்களும் பொலிஸாரினுல் அடித்து நொருக்கப்பட்டது. முன்னுள் மாவட்ட நீதிபதி திரு. தம்பித்துரையின் காரும் உடைக்கப்பட்டது. நான் கொழும்பு சென்று பிரதமரை நேரில் சந்திக்க விரும்பினேன்.

[நாளை 'ஈழநாடு' இதழில், திரு. அமிர்தலிங்கத்தின் சாட்சியத்தில் மிகுதி பகுதி வெளிவரும்]

## காரைநகரில் இன்று திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

காரைநகரில் புதிய அச்சகமொன்று இன்று மாலைதிறக்கப்படுகிறது. நாவலப்பிட்டி ஆத்மஜோதி அச்சக உரிமையாளர் திரு. அருமைநாயகம் இதனைத் திறந்துவைப்பார். வட்டுக்கோட்டைத் தேசியப்பேரவை உறுப்பினர் திரு. தா திருநாவுக்கரசு மின்சார பித்தானை அழுத்திஇயந்திரத்தை இயங்க வைப்பார்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரெத்தினம் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரை வழங்குவர். இதுவே காரைநகரில் அமையும் முதல் அச்சகமாகும். [அ]

# பொலிஸாரின் தாக்குதலின்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வில்லை, தமிழர்களை ஆட்சி செய்வதற்காக நியமிக்கப்பட்டதாக கருதுகிறார்கள். கலவர சம்பவங்கள் தொடர்பாக அலசி ஆராயப்பட வேண்டியவற்றில் இதுவும் ஒன்றாகும்.

## பொலிஸ் உதவியுடன்...

"மற்றது குடியேற்றத் திட்டத்தில் தவருன கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதாகும். தமிழர் பரம்பரை பரம்பரையாக வாழும் தமிழ் பிரதேசத்தில், சிங்கள மக்களை குடியேற்றி அவர்கள் சொந்த நிலத்திலேயே, தமிழரை சிறுபான்மையினராக்குவதற்கு வழிசெய்கிறது. தமிழ் பிரதேசங்களில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள், தமிழர்கள் அங்குவாழ உரிமை இல்லை என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள். பொலிஸாரின் உதவியுடன் குண்டர்கள் தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

"ஒழுங்கின்மை, சட்டத்திற்கு கட்டுப்படாமை, முறையான பயிற்சியின்மை, ஆகியவையே பொலிஸாரின் நடத்தைக்கு காரணமாயுள்ளது.

## உயர் அதிகாரிகளும் உதவினர்

"பொலிஸார் சட்டத்திற்கு அடங்காமல் நடந்து கொண்டதற்கு சில உயர் அதிகாரிகள் உதவியாகவும், அனுசரணையாகவும் இருந்தார்கள். இதற்கு என்ன பரிகாரம் அளிக்கலாம் என்பது பற்றி, கமிஷன் விசாரணை முடியும் தறுவாயில், விளக்கவிருக்கிறேன்" (க)

இப்பத்திரிகை "ஈழநாடு. லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka